முற்பகல் 10-25

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கவயலுக்கும் இங்கே நம்முடைய மாநிலத்திற்கும் பேருந்துகளை நாம் இயக்கிக் கொண்டிருக்கிறோம். தர்மபுரியிலிருந்து அன்னை சத்தியா போக்குவரத்துக் கழகம் கிருஷ்ணகிரி வழியாக கோலார் தங்கவயல் வரையிலும் பேருந்துகளை இரண்டு நடைகள் இயக்கிக் கொண்டிருக்கிறது. அதைக் கூடுதலாக்க வேண்டுமென்று சொன்னால் இரண்டு மாநிலங்களுக்கிடையே ஒப்பந்தம் ஏற்படுகிறபோது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகளையும் கருத்தில்கொண்டு அது நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 27, திரு. டி. வேலையா, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்.

27—

மெரினா சாலையில் வாகனப் போக்குவரத்தைத் தடை செய்தல்

***38425*—திரு. டி. வேலையா :**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடற்பயிற்சி செய்ய வருவோரின் நலனை முன்னிட்டு, சென்னை மெரினா சாலையில் காலை வேளையில் வாகனப் போக்குவரத்து தடை செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மெரினா சாலையில் உடற்பயிற்சி செய்ய வருவோரின் நலனை முன்னிட்டு காலை வேளையில் போக்குவரத்து காவல் துறையினர் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தி வருகின்றனர். ஆகவே, போக்குவரத்தைத் தடை செய்ய அவசியமில்லை.

திரு. டி. வேலையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் 'ஹெல்த் கான்சியஸ்' எல்லா மக்கள் மத்தியிலும் அதிகமாக ஏற்பட்டிருக்கிறது. இங்கே அமர்ந்து இருக்கிற சிலர்கூட அந்த பகுதிக்குச்

1995 நவம்பர் 7]

சென்று நடை பயிலுவதன் மூலமாக உடற்பயிற்சி செய்கிற வாய்ப்பு உள்ளது. அங்கே இப்போதெல்லாம் சிறு குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை, படித்தவர்கள் படிக்காதவர்கள், வசதி படைத்தவர்கள், இல்லாதவர்கள் என்கின்ற வேறுபாடுகள் இல்லாமல் எல்லோருமே அந்த இடத்தை மிகவும் ஆர்வமாக பயன்படுத்தி வருகிறார்கள். அதோடு, இப்போது எழில்மிகு சென்னை இரண்டாயிரம் என்ற திட்டத்தின் அடிப்படையில் நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய நல்லாட்சியில் நடைபாதைகள் எல்லாம் நன்றாக போடப்பட்டு, விளக்கு வசதிகள் எல்லாம் நன்றாக செய்யப்பட்டிருக்கின்றன. அவற்றை அங்கே நடந்து செல்லுகின்ற பொதுமக்கள் பாராட்டுவதை நான் காதால் பலமுறை கேட்கிற வாய்ப்பைப் பெற்றிருக்கிறேன். அதுபோல் சில குறைகளையும் அங்கே வருகின்ற மக்கள் கூறுவதை நம்மால் கேட்க முடிகிறது. அதுமட்டுமல்ல, இப்போது அங்கே வாலிபால், புட்பால், கிரிக்கெட், ஹாக்கி போன்ற விளையாட்டுகளை எல்லாம் நிரந்தரமாக விளையாடுகிற அளவுக்கு அது ஒரு முக்கியமான பகுதியாக இப்போது விளங்கிக் கொண்டிருக்கிறது. காலை நேரங்களில் அங்கே — நான் எல்லா வாகனங்களும் என்று கூறவில்லை. நான் கனரக வாகனங்கள் என்றுதான் நினைத்து எழுதினேன். எப்படியோ வாகனங்கள் என்று இருக்கிறது — காலை நேரங்களில் புகையைக் கக்கிக்கொண்டும், தூசியை எழுப்பிக் கொண்டும், சத்தம் ஏற்படுத்திக் கொண்டும், அங்கே லாரிகள், பஸ்கள் — காலையில் 5 மணிக்கே — ஹெவி டிராப்பிக்கை அங்கே ஏற்படுத்திக்கொண்டிருக்கிற சூழ்நிலையில், எல்லோரும் கர்ச்சீப்பால் முகத்தை மூடிக்கொண்டு போகிற அளவுக்கு காலையில் 5 மணிக்கே ஏற்பட்டுவிடுகிறது. ஆகவே கனரக வாகனங்களைப் பொறுத்த வரையிலாவது காலை நேரங்களில் போக்குவரத்துத் தடை செய்ய முடியுமா என்பதைக் கேட்பதோடு மவுண்ட்ரோடு போன்ற சாலைகள் எல்லாம் காலை நேரங்களில் ஃபிரியாகத்தான் இருக்கின்றன. ஆகவே அந்த வழியாக அந்த வாகனங்களைத் திருப்பி விடுவதில் சிரமம் இருக்காது என்று நான் கருதுகிறேன் — ஆகவே அதையும் கருத்தில் கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மெரினா சாலையில் உள்ள இடத்தில் உடற்பயிற்சியாளர்கள் தங்கள் கார்களை மற்றும் வாகனங்களை நிறுத்துவதற்குத் தேவையான இடவசதி அங்கே இருக்கிறது. உடற்பயிற்சி செய்வதற்கு வேண்டிய இடமும் அங்கே இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, கனரக வாகனங்களை அங்கே இயக்கப்படுவது

காலை நேரங்களில் நிறுத்தப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகின்ற அந்த கனரக வாகனங்களில் — அந்தப் பகுதியிலிருந்து பல்வேறு பகுதிகளுக்கு நாம் இயக்கிக் கொண்டிருக்கிறோம் — உடற்பயிற்சி செய்பவர்கள்கூட கனரக வாகனங்களில் வந்திறங்கி உடற்பயிற்சி செய்துவிட்டு மீண்டும் பேருந்துகளிலே பயணம் செய்கின்ற நிலை இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சட்டமன்ற விடுதியிலே இருந்து நடந்தோ அல்லது ஆட்டோவிலோ அந்தப் பகுதிக்கு சென்றுவிடுகிறார். ஆகவே உறுப்பினருக்கு கவலை இல்லை. ஆனால், தூரத்திலிருந்து வந்து மெரினா கடற்கரையில் உடற்பயிற்சி செய்ய வேண்டுமென்று விரும்பினால் பேருந்தில் வருகின்ற பலபேர்களுக்கு போக்குவரத்துத் தடை செய்யப்பட்டால் இடையூறு ஏற்படும். ஆகவே உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்க இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10.30

திரு. டி. வேலையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர்கள் லாரிகளை மட்டுமாவது தடை செய்ய முடியுமா என்று கேட்கிறார்கள். மெரினா கடற்கரையைப் பொறுத்தவரையில் கிட்டத்தட்ட 80 லட்சம் மக்கள் வாழ்கின்ற பகுதியாக இருந்து நல்ல காற்றோட்டம் கிடைக்கின்ற ஒரே இடமாக இருந்து கொண்டிருக்கிறது. அங்கே இப்போது இருக்கின்ற ஒரு ஆபத்தான நிலை என்னவென்றால், மெரினா கடற்கரையிலுள்ள ஃப்பிரி ஸ்பேஸ், ஓப்பன் ஸ்பேஸ் என்கிற இடம் குறைந்துகொண்டு வருகிற ஆபத்து இப்போது ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் அங்கே நிரந்தரமாக குடிசைகள் கட்டுகின்ற ஆபத்தும், குளிப்பது, தண்ணீர் எடுப்பது போன்ற காரணங்களால் அங்கே துர்நாற்றம் காலை நேரங்களில்கூட வீசக்கூடிய சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. குடிசைகள் எல்லாம் அங்கே போடப்பட்டு இடங்களை குறைக்கின்ற ஆபத்து ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே, வருங்காலத்தில் மெரினா பீச்சினுடைய முக்கியத்துவமும் அதனுடைய மகிமையும் குறையாத அளவுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய காலகட்டத்திலே நாம் இருக்கிறோம். ஆகவே, இந்த நேரத்தில் லாரிகள் மட்டுமாவது அந்த இடத்திலே வராமல் இருப்பதற்கு தடை செய்ய அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க மறுபரிசீலனை செய்வாரா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

1995 நவம்பர் 7]

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய உணர்வுகளைக் கருத்திற்கொண்டு, லாரி ஓட்டுநர்கள் சங்கத்தைச் சேர்ந்தவர்களை வைத்துப் பேசி, காலை 7 மணி வரையிலுமாவது லாரிகளை அந்தப் பகுதியில் இயக்காமல் இருக்க முடியுமா என்பதை அரசு பரிசீலிக்கும். அதற்குப் பிறகு அந்தப் பகுதியில் குடிசைகள் அதிகமாக வந்துகொண்டிருக்கின்றன என்ற உணர்வினை வெளிப்படுத்தினார்கள். குடிசைகளைப் பொறுத்தவரையில் எல்லா அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களும், நீதிமன்றமும் இதற்கு உதவி செய்தாலொழிய குடிசைகளை அப்புறப்படுத்துவது என்பது அவ்வளவு சுலபமான காரியம் அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். ஜெயக்குமார்.

திரு. எஸ். ஜெயக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மெரினா கடற்கரையிலே, வயோதிகர்களும், வயதானவர்களும் தங்கள் உடல்நலத்தைக் காப்பதற்காக Walkers' Association என்று வைத்துக்கொண்டு, தங்களுடைய உடற்பயிற்சியைச் செய்து வருகிறார்கள். அவர்கள் உடற்பயிற்சி செய்து முடித்துவிட்டுத் திரும்புகிறபோது . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சட்ட அமைச்சர் உங்களையே பார்க்கிறார். வயதானவர்கள் என்று வேண்டுமானால் சொல்லுங்கள், வயோதிகர்கள் என்று சொல்லாதீர்கள். (சிரிப்பு).

திரு. எஸ். ஜெயக்குமார் : பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி அவர்கள் உடற்பயிற்சி செய்து முடித்துவிட்டுத் திரும்புகிறபோது அங்கே அவர்கள் ஆட்டோக்களை அணுகுகிறபோது, அவர்கள் அதிகமாக ஆட்டோ கட்டணம் கேட்டு, துன்பம் விளைவிக்கின்றார்கள். எனவே அந்தத் துன்பத்தைப் போக்குவதற்காக, ஆட்டோ கட்டணம் மீட்டருக்கு மேல் வசூலிக்கக்கூடாது என்று, fixed fare நிர்ணயித்து, உடற்பயிற்சி செய்ய வருகிறவர்களுக்கு உதவிகரமாக ஏதாவது செய்ய அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், வயோதிகர்கள் உடற்பயிற்சி செய்ய வருகிறார்கள் என்று சொன்னார்கள். இளைஞர்களும்கூட உடற்பயிற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். ஏனென்று சொன்னால், இன்றைக்கு நம்முடைய தமிழகத்தின் ஆற்றல்மிக்க முதலமைச்சராக இருக்கிற மாண்புமிகு புரட்சி தலைவி அவர்கள் இந்தியத் துணைக் கண்டத்திற்குள்ளே

இந்த மாநிலத்தை ஒரு எடுத்துக்காட்டாக உருவாக்க வேண்டுமென்ற அடிப்படையில் நேரு விளையாட்டரங்கத்தைக் கட்டிமுடித்து உலக சாதனை படைத்திருக்கிறார்கள். ஆகவே, அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் தமிழகத்திலே இருக்கிற இளைஞர்கள்கூட உடற்பயிற்சி செய்ய வேண்டுமென்று போகின்றபொழுது, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததுபோல், அங்கே உடற்பயிற்சி செய்து முடித்துவிட்டு, திரும்பிச் செல்வதற்கு ஆட்டோக்களை அணுகுகிறபோது ஆட்டோ கட்டணம் அதிகமாகக் கேட்கிறார்கள் என்ற குறைபாடு என்னிடத்திலேயும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. பல்வேறு சமூக நிறுவனங்கள் என்னிடத்திலே சுட்டிக்காட்டியதன் வாயிலாக ஆட்டோ ஓட்டுநர்கள் மற்றும் பல்வேறு சமூகசேவை நிறுவனங்களை அழைத்துப் பேசி, அதன் அடிப்படையில் 5 ரூபாய் 60 பைசா என்று இருந்த ஆட்டோ கட்டணத்தை 6 ரூபாய் என்று குறைந்தபட்சம் உயர்த்தலாம் என்றும், அதேபோல ஒரு கிலோமீட்டருக்கு 2 ரூபாய் 80 பைசா என்று இருந்ததை 3 ரூபாயாக உயர்த்தலாம் என்றும் தமிழகத்தின் முதல்வர் புரட்சி தலைவி அவர்கள் இன்றைக்கு ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். வருகின்ற 15 ஆம் தேதியிலிருந்து அது அமுல்படுத்தப்படும் என்ற நல்ல செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஜீனத் சர்புதீன்.

திருமதி ஜீனத் சர்புதீன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடல் பருமனாக உள்ளவர்கள் தங்களுடைய எடையைக் குறைத்துக் கொள்வதற்காக நடக்கிறார்கள், ஓடுகிறார்கள். அப்படி ஓடும்போதும், நடக்கும்போதும், நடு ரோட்டில் ஓடுகிறார்கள், நடக்கிறார்கள், ஓடுகிறவர்கள், நடக்கிறவர்கள் 'பேவ்மெண்டில்' தான் போகவேண்டும் என்று விதி ஏதாவது இருக்கிறதா ? அப்படி விதி எதுவும் இல்லாவிட்டால் அதை அரசு கொண்டு வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு எந்த விதியையும் கொண்டுவரத் தேவையில்லை. நடந்து செல்கின்றவர்கள், சைக்கிளில் வருகின்றவர்களைப் பார்க்கும்போது ஓரமாகச் செல்கிறார்கள். அதேபோல சைக்கிளில் செல்கின்றவர்கள் மோட்டார் பைக்கிலே வருகின்றவர்களைப் பார்க்கும்போது ஓரமாகச் சென்று கொண்டிருக்கிறார்கள். காரிலே வருகின்றவர்களைப் பார்க்கின்றபோது, மோட்டார் பைக்கிலே செல்கின்றவர்கள் ஓரமாகச் செல்கின்றார்கள். லாரியைப் பார்த்த உடனே காரே ஓரமாகச் சென்று கொண்டிருக்கிறது. எனவே, அதற்காக ஒரு விதி அமைக்கத் தேவையில்லை.